வடமராட்சிக்கான
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 75

வியாழக்கிழமை 09 பெப்ரவரி 2023 | தை 26 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12

# நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்துவதே இலக்கு



## கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

## அனைவரும் ஒத்துழைக்கவேண்டுமெனக் கோரிக்கை

கொழும்பு, பெப்ரவரி 9

நானும், இரா.சம்பந்தனும் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டோம். நாம் இருவரும் நாடாளுமன்றத்தில் இருக்கின்றபோது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் கண்டுவிடவேண்டுமென்ற ஒரு பொதுவான கனவு எம் இருவருக்கும் உண்டு. அந்தக் கனவு தொடர்பாக அன்று முதல் இன்றுவரை நாம் கலந்துரையாடுகின்றோம், முயற்சி செய்கின்றோம். முன்னைய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. தற்போது அதை வெற்றியடையச் செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்காக உங்கள் அனைவரினதும் (நாடாளுமன்ற உறுப்பினர்கள்) ஒத்துழைப்பையும் நாம் எதிர்பார்க்கின்றோம். »11

## பொருளாதார நோயாளிக்கு சிகிச்சையளிக்கிறாராம் ரணில்

கொழும்பு, பெப்.9

இலங்கை பொருளாதார ரீதியாக கவலைக்கிடமாக நோயாளியாக இருக்கின்றது. நோயை இனங்கண்டு உடனடியாக அதற்குத் »11

## தேர்தலில் வென்று வந்து '13ஐ' செயற்படுத்துங்கள்

ரணில் மேல் மெதகொட பாய்ச்சல்

கொழும்பு, பெப்.9

13 ஆவது திருத்தச் சட்டத்தை உள்ளடக்காத, பிரிவினைவாதம் அற்ற புதியதொரு அரசமைப்புக்கே 69 லட்சம் பேர் ஆணை வழங்கினர். »11

## அரசியல் கைதிகள் விடுவிப்பில் கவனம் செலுத்துகின்றது அரசு!

ரணில் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.9

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக கண்டறிவதற்கான முறைமையை நாம் முறைமைப்படுத்தி துரிதப்படுத்துவோம். பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பெயரில் »11

## பேரணியில் கலந்துகொண்ட 7 பேருக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம், பெப்.9

"வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி" என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட பேரணியில் கலந்துகொண்டமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வேலன் சுவாமி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் உள்ளிட்ட ஏழுபேருக்கு பொலிஸாரால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இந்த அழைப்பாணை »11


## காணிகள் விடுவிப்புக்கான நடவடிக்கை முன்னெடுப்பு

கொழும்பு, பெப்.9

போர் முழு நாட்டையும் பாதித்துள்ளது. வடக்கு -கிழக்கு மாகாணங்கள் போர் காரணமாகப் பெரும் துன்பங்களை அனுபவித்தன. »11

## 13 ஐ எரித்த பிக்குகள்!

நேற்றுப் பதற்றம்



கொழும்பு, பெப்.9

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை தீயிட்டு எரித்து '13' ஆவது திருத்தத்துக்கு எதிராக மகா சங்கத்தினர் கொழும்பில் நேற்றுப் பெரும் பேரணியொன்றை முன்னெடுத்தனர்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித் »10

## புதிய வரிக்கொள்கை விரும்பாது எடுத்த முடிவு

ஜனாதிபதி ரணில் விளக்கம்

கொழும்பு, பெப்.9

வரி அறவிடுவதற்கான புதிய கொள்கையை அறிமுகப்படுத்துவது அரசியல் ரீதியாக சிறப்பான தீர்மானம் அல்ல, நினைவில் கொள்ளுங்கள். »10

## வரிக் கொள்கைக்கு எதிராக பெரும் எதிர்ப்புப் போராட்டம்

நாடளாவிய ரீதியில் பல துறைகள் முடக்கம்

கொழும்பு, பெப்.9

நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக மருத்துவமனைகள், பல்கலைக் கழகங்கள், பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் செயற்பாடுகள் நேற்றுப் பாதிக்கப்பட்டன. »11

## முல்லைத்தீவு மாவட்டத்தில் இருநாள் பெய்த மழையால் 1,518 ஏக்கர் நெற்பயிர் நாசம்

முல்லைத்தீவு, பெப்.9

கடந்த முதலாம் திகதியும், இரண்டாம் திகதியும் பெய்த மழையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 518 ஏக்கர் நெற் செய்கை நாசமாகி »10

## மருத்துவர்கள் போராட்டம் அவதியுற்ற நோயாளர்கள்!

யாழ்ப்பாணம், பெப்.9

நாடெங்கும் மருத்துவர்கள் நேற்று 24 மணிநேரப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், கிளினிக் மற்றும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

அரசாங்கத்தின் முறையற்ற வரிக் கொள்கையைக் கண்டித்தும், »10

# சுதந்திரதினச் செலவு 11 மில்லியன் மட்டுமே

## ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை

கொழும்பு, பெப். 9

75ஆவது சுதந்திரதின நிகழ்வுகளுக்குச் செலவிடப்பட்ட தொகை 11 மில்லியன் ரூபா மட்டுமே என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கடந்த ஐந்து வருடங்களில் சுதந்திரதின நிகழ்வுகளுக்கு செலவிட்ட தொகையில் மிகக்குறைந்த தொகையாக இந்த வருட சுதந்திரதினத்துக்குச் செலவிடப்பட்ட தொகை கணக்குக் காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த வருடம் 94.7 மில்லியன் ரூபாவும், 2021ஆம் ஆண்டு 80.6 மில்லியன் ரூபாவும், 2020ஆம் ஆண்டு 63.2 மில்லியன் ரூபாவும், 2019ஆம் ஆண்டு 68.1 மில்லியன் ரூபாவும், 2018ஆம் ஆண்டு 86.8 மில்லியன் ரூபாவும் சுதந்திரதினத்துக்காகச் செலவிடப்பட்டுள்ளது. (ம-6)

# ஐ.எம்.எப். கடன் வழங்க பரிஸ் கிளப் உத்தரவாதம்

## அமெரிக்கா வரவேற்பு

கொழும்பு, பெப். 9

இலங்கைக்கான கடன் உதவிகளை சர்வதேச நாணய நிதியம் வழங்குவதற்கான உத்தரவாதத்தை தாம் வழங்குவதாக பரிஸ் கிளப் நாடுகள் அறிவித்துள்ளன.

பரிஸ் கிளப் நாடுகள் வழங்கிய இந்த உறுதிமொழியை அமெரிக்கா வரவேற்கின்றது - மகிழ்ச்சியடைகின்றது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பேச்சுக்களை மேற்கொள்வதற்கான தங்கள் அர்ப்பணிப்பை வழங்குவதாக பரிஸ் கிளப் நாடுகள் தெரிவித்துள்ளன. இலங்கையின் நீண்டகால கடன் நிலவரம் உட்பட இலங்கையின் பொருளாதார நிதி நிலைமையை ஆராய்ந்த பின்னர் இதனை அறிவித்துள்ளன. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் டொலர் கடனை இலங்கை பெற்றுக்கொள்வதற்கு இந்த உத்தரவாதம் முக்கியமானது.

அதேவேளை ஹங்கேரி, சவூதிஅரேபியா, சீனா உட்பட இலங்கைக்கு கடன் வழங்கிய ஏனைய தரப்பினரும் தமது வகிபங்கை வெளிப்படுத்தவேண்டும் என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# மட்டுவில் கத்தரிக்காய் விளைச்சலில் வீழ்ச்சி!

சாவகச்சேரி, பெப்.9

மட்டுவில் கத்தரிக்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளமையால் மார்ச் மாதத்தில் சந்தைகளுக்கு வருவது குறைவடையலாம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

மட்டுவில் தோட்டங்களில் பயிரிடப்படும் கத்தரி அறுவடை பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தன்று ஆரம்பிக்கப்படும். கடந்தவாரம் பெய்த பெரு மழையால் கத்தரித் தோட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கி பயிர்கள் பழுதடையும் நிலையில் காணப்படுகின்றது. தற்போது தோட்டங்களில் வெள்ளம் காணப்படுவதால் மீள்நடுகை சாத்தியமற்றது.

அந்தவகையில் மார்ச் மாதத்தில் மட்டுவில் தோட்டங்களிலிருந்து விளையும் கத்தரிக்காய் சந்தைகளுக்கு விநியோகிக்கப்படுவது குறைவடையக்கூடும் என விவசாயிகள் மேலும் தெரிவித்தனர். (ச-9)

# இலங்கைக் கையிருப்பு 2.1 பில்லியன் டொலர்!

கொழும்பு, பெப். 9

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இறுதிப் பகுதியில், இலங்கையின் உத்தியோகபூர்வ நிதிக்கையிருப்பு 2.1 பில்லியன் டொலர் என்று இலங்கை மத்தியவங்கி அறிவித்துள்ளது.

இது, 2022ஆம் ஆண்டு டிசெம்பரில் இருந்த உத்தியோகபூர்வ கையிருப்புப் புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடுகையில் 11.7 சதவீத அதிகரிப்பு என்றும் மத்தியவங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

## வேட்புமனு நிராகரிப்பு

# அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, பெப். 9

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையை இன்று 2 மணிக்குள் தாக்கல் செய்யுமாறு சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரைதுறைப்பற்று உள்ளூராட்சிசபைக்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக இலங்கை தமிழரசுக் கட்சியால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்த கோரிக்கையைப் பரிசீலித்த உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# துமிந்தவுக்கான மன்னிப்பு அரசமைப்புக்கு முரணே!

## உயர்நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 9

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலை வழக்கில் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்டுள்ள பொதுமன்னிப்பு, அரசமைப்புக்கு முரணானது என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் அவரது தாயார் சுமனா பிரேமச்சந்திர மற்றும் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கசாலி ஹூசைன் ஆகியோர், துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கியமையை சவாலுக்கு உட்படுத்தி, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த மனுக்கள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

விசாரணையின்போது, ஹிருணிகா பிரேமச்சந்திர சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், பொதுமன்னிப்பு வழங்குவதில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட நடைமுறைகளைப் பின்பற்றவில்லை என்றும் வழங்கப்பட்டுள்ள பொதுமன்னிப்பு அரசமைப்புக்கு முரணானது என்றும் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

குறித்த பொதுமன்னிப்பை வலிதற்றதாக்கும் அதிகாரம் நீதிமன்றுக்கு இருப்பதாகவும் பொதுமன்னிப்பு வழங்கும்போது சட்டமா அதிபரின் அறிக்கை கோரப்படவில்லை என்றும் சுமனா பிரேமச்சந்திரவின் சட்டத்தரணி நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். வாதப்பிரதிவாதங்களை பரிசீலித்த நீதியரசர்கள் குழாம் மனுமீதான மேலதிக விசாரணைகள் மார்ச் மாதம் 20, 23, 28ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று அறிவித்தது. (ம)

# மன்னார் இ.போ.ச.பஸ்ஸில் பயணித்தவருக்கு களங்கம்!

## சாரதி- நடத்துநர் பணி இடைநீக்கம்

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட இ.போ.ச. பஸ்ஸில் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் அநாகரிக முறையில் செயற்பட்டனர் என பயணியொருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

மன்னாரிலிருந்து கொழும்புக்குச் செல்வதற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணியொருவர் இரண்டு ஆசனங்களுக்கு முன்பதிவு செய்து பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டார்.

குறித்த பயணி பஸ்நிலையம் சென்று பேருந்தில் ஏறி பதிவு செய்த ஆசனத்தில் அமரச் சென்றபோது அவர் பதிவு செய்த ஆசனத்தில் பெண்ணொருவர் அமர்ந்திருந்தார்.

இதுகுறித்து நடத்துநரிடம் வினவியபோது, "நீ என்னிடமா ஆசனம் பதிவு செய்தாய்? பதிவு செய்தவனிடம் கேள்?" என தகாத வார்த்தைகளால் ஏசி பேருந்தை விட்டுக் கீழே இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர். பாதிக்கப்பட்ட பயணி பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநருக்கு எதிராக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்து சேவையில் பொது மக்களுடன் நாகரிகமாக உரையாடத் தெரியாத நடத்துநர் சாரதியால் எவ்வாறு மக்களுக்கு சேவையாற்ற முடியும்? இத்தகைய அநாகரிக செயலானது ஏனைய பணியாளர்களுக்கும் களங்கத்தை ஏற்படுத்தும் செயல் என குறித்த பயணி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மன்னார் இ.போ.ச. சாலை முகாமையாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது,

இதுகுறித்த முறைப்பாடு எமக்கும் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சாரதி- நடத்துநர் ஆகியோரை அழைத்து எச்சரித்ததுடன் அவர்களின் ஒரு மாத ஊதியத்தை இரத்துச் செய்து அவர்கள் ஒருமாத காலத்துக்கு பணியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைப் பிற்போடும் எண்ணம் அரசுக்கில்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.9
மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு எந்தவொரு பிரேரணையையும் நாடாளுமன்றில் முன்வைப்பதற்கு அரசு முற்படவில்லை.

இவ்வாறு அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் 4ஆவது கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமாகியது. அன்றைய தினம் ஜனாதிபதி கொள்கை விளக்கவுரையாற்றினார்

இந்த உரையின்போது உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் யோசனையை முன்வைப்பார் என எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போடக் கோரும் எந்தவொரு பிரேரணையையும் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அரசு முற்படவில்லை.

நாட்டில் வருமானத்தைவிடவும் செலவினங்கள் அதிகம். எனவே நாடாளுமன்றத்துக்கு அது பற்றி பொறுப்புகூற வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது - என்றார். (ச-44)

## சரண எம்.பிக்கு எதிராக வழக்கு

முன்னாள் பிரதி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தனவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் குற்றப்பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சரண குணவர்த்தன அபிவிருத்தி லொத்தர்சபையின் தலைவராக கடமையாற்றிய போது, லொத்தர்சபைக்குத் தேவையான வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டபோது முறையான நடைமுறைகளை பின்பற்றாமை காரணமாக அரசாங்கத்துக்கு சுமார் 9 இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் முன்னிலையாக வேண்டும் என்று விடுக்கப்பட்ட அறிவிப்புக்கு அமைய முன்னாள் பிரதி அமைச்சர் நீதிமன்றில் நேற்று முன்னிலையானார்.

வழக்கை விசாரித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா சந்தேகநபர் 50 ஆயிரம் ரூபா மற்றும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதி வழங்கினார்.

அத்துடன் பிரதிவாதிக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டதுடன், கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்கவேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. (எ-இ)

## கருத்திட்ட அலுவலகங்களை மூட அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 9
பல்வேறு நோக்கங்களுக்காக நிறுவப்பட்ட அதிக பணியாளர்களைக் கொண்ட 55 கருத்திட்ட அலுவலகங்களை மூடுவதற்கும் 32 திட்ட அலுவலகங்களை இடைநிறுத்தவும் அமைச்சரவை அனுமதித்துள்ளது.

குறித்த அலுவலகங்கள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளின் செயற்பாடுகள் குறித்து மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கமையவே மூடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கருத்திட்ட முகாமைத்துவ அலகுகள் தொடர்பில் மீளாய்வு செய்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக முன்னாள் அமைச்சின் செயலாளர் எச்.ரீ.கமல் பத்மசிறி தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது.

மேற்படி குழு தற்போது நடத்திச்செல்லப்படும் 55 கருத்திட்ட அலகுகளை முடிவுறுத்தவும் 32 முகாமைத்துவ அலகுகளை இடைநிறுத்துவதற்கும் 46 கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளை குறைந்தபட்ச பணிக்குழாத்துடன் நடத்திச் செல்வதற்கும் பரிந்துரைத்தது.

அதற்கமைய குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (ச-44)

## நாட்டைவிட்டு வெளியேறும் விமான கட்டுப்பாட்டுப் பணியாளர்கள்!

கொழும்பு, பெப். 9
விமான போக்குவரத்து கட்டுப்பாட்டுப் பணியாளர்களின் வெளியேற்றம் நாட்டின் பொருளாதாரத்தில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு பணியாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

கடந்த ஆண்டு விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரிகள் 19 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். 131 பேர் கடமையாற்ற வேண்டிய நிலையில் தற்போது 81 பேர் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிக்கும் ஏற்றுமதி, இறக்குமதி, சுற்றுலா நடவடிக்கைகளுக்கு விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களின் பணி இன்றியமையாததாகும். உத்தியோகத்தர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதால் ஏற்படும் பணியாளர் பற்றாக்குறை காரணமாக வேலைநிறுத்தம் செய்யாமலேயே விமானப் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம்.

சம்பளக் கோரிக்கை உட்பட ஒன்பது கோரிக்கைகளை விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் முன்வைத்தோம். எமது கோரிக்கை செவிசாய்க்கப்படவில்லை. இதன்காரணமாக அதிகளவான பணியாளர் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ச-6)

## '13' ஆவது திருத்தத்தால் பெரமுனவில் குழப்பம்!

### பஸில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.9
அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் விடயம் தொடர்பில் இன்னமும் எவ்வித தீர்மானத்தையும் பொதுஜன பெரமுன கட்சி எடுக்கவில்லை என பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த விடயம் தொடர்பில் கட்சிக்குள் இருவேறு கருத்துகள் காணப்படுகின்றன.

உதாரணமாக சரத் வீரசேகர போன்றவர்கள் அதனை எதிர்க்கின்றனர். இந்த விடயம் ஆழமாக ஆராயப்பட்டு வருகின்றது. கட்சி என்ற வகையில் இன்னும் உறுதியான இறுதியான முடிவை நாம் எடுக்கவில்லை.

ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டை ஆதரிக்க முடியும். மஹிந்த சிந்தனையிலும் இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

'13 பிளஸ்' என்ற கருத்தை மஹிந்த ராஜபக்ச முன்வைத்தார். அதுஅனைத்து மாகாண சபைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான செனட் சபை முறையாகும் - என்றார். (ச-44)

## ஆட்கடத்தல் மோசடி ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 9
இலங்கையிலிருந்து சுற்றுலா விசாவில் மனிதக் கடத்தலில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் மற்றொரு சந்தேகநபர் அம்பலாந்தோட்டையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபர் தாய்லாந்தில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி சுமார் 19 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்து எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொருவர் தலைமறைவாகியுள்ளார் எனவும் அவரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## உயர்கின்றது இலங்கையின் கடன் தொகை

கொழும்பு, பெப்.9
நிதி நெருக்கடி நிலைமை காரணமாக 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17.59 ட்ரில்லியன் ரூபாவாக காணப்பட்ட நாட்டின் மொத்தக் கடனானது 2022 இல் 25.5 ட்ரில்லியனாக அதிகரித்துள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் எதிர்கொண்ட சவால்கள், கொரோனாத் தொற்று மற்றும் நாட்டின் தேசிய தேவைகளை பூர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை காரணமாக இந்த அதிகரிப்பு நடந்துள்ளது.

இது 45 வீத அதிகரிப்பு எனக் கூறப்படுகிறது.

இதேவேளை உள்நாட்டு கடன் தொகையானது 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11.78 ட்ரில்லியனாக இருந்த நிலையில் 2022 ஆம் ஆண்டில் 13.73 ட்ரில்லியனாக அதிகரித்துள்ளது என மத்திய வங்கி கூறுகின்றது.

இது நாட்டுக்கு பெரும் தாக்கத்தை செலுத்தும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### அச்சுவேலி ப.நோ.கூ.சங்க

## கிளை விற்பனை நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 9

அச்சுவேலி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை விற்பனை நிலையம் கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட்டது. நாவற்காடு பகுதியில் இந்த கிளை விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

திறப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் கலந்துகொண்டு கிளை நிலையத்தை திறந்து வைத்தார். (ச-17)

# உயிர்வாழ் சான்றிதழ் பதிவுகளில் குழப்பம்

சாவகச்சேரி, பெப். 9

**2023 ஆம் ஆண்டுக்கான உயிர்வாழ் சான்றிதழ் பதிவுகள் அடுத்த வாரம் முடிவடையவுள்ள நிலையில் சிலரது பதிவுகள் கிராம அலுவலர்களுக்கு கிடைக்கவில்லை எனவும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் ஓய்வு பெற்றவர்களின் விரல் அடையாளத்தை வங்கி இயந்திரம் ஏற்க மறுப்பதாலும் ஓய்வூதியர்கள் குழப்பமடைந்துள்ளனர்.**

கடந்த வருடங்களில் வருட ஆரம்பத்தில் பிரதேசசெயலக ஓய்வூதிய அலகால் ஓய்வூதியர்களுக்கு உயிர்வாழ் சான்றிதழ் தொடர்பான படிவத்தை அனுப்பி விவரங்களைப் பெற்று வந்தனர். இந்த வருடம் புதிய நடைமுறையாக 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்றவர்கள் தமது பிரிவு கிராம அலுவலருக்கு வழங்கப்பட்ட படிவத்திலும், 2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வுபெற்றவர்கள் ஓய்வூதியத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்ட வங்கிகளிலும் விரல் அடையாளம் இட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இவற்றை 2023ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

கிராம அலுவலருக்கு வழங்கப்பட்ட படிவத்தில் சிலரின் பெயர் பதிவு செய்யப்படவில்லை. 2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வுபெற்றவர்கள் வங்கியில் விரல் அடையாளம் பதிவுசெய்த போது இயந்திரம் ஏற்கவில்லை. இதனால் தமது ஓய்வூதியம் தொடர்பில் ஓய்வூதியர்கள் குழப்பமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக பிரதேசசெயலக ஓய்வூதியக் கிளைகளுடன் தொடர்புகொண்டபோது ஓய்வூதிய அலகில் ஒரே பட்டியலில் உள்ளவர்களின் பெயர்களை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பதிவு செய்யும்போது சிலரது பெயர்கள் விடுபட்டிருக்கலாம். அவ்வாறு பெயர்ப் பட்டியலில் பெயர் வராதவர்கள் ஓய்வூதிய அலகில் தொடர்புகொள்ளுங்கள். 2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வுபெற்ற சிலர் அலுவலகங்களில் அடையாளம் இட்ட விரலை மாற்றுவதால் வங்கி இயந்திரம் ஏற்க மறுக்கலாம். இவ்வாறான பிரச்சினைகள் உள்ளவர்கள் ஓய்வூதிய அலகுடன் தொடர்புகொண்டால் அந்தந்த கிராமஅலுவலர் மூலம் தனியான பட்டியலில் கையொப்பமிட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-14-9)

## தண்ணிமுறிப்புக் குளத்தை சீரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, பெப். 9

முல்லைத்தீவு தண்ணிமுறிப்புக் குளத்தைப் புனரமைப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1954 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தண்ணிமுறிப்புக் குளம் 21 அடி முழுமையான நீர் மட்டத்தைக் கொண்டது. 2 ஆயிரத்து 700 ஏக்கருக்கு நீர்ப்பாசனம் செய்யக் கூடியது. கடந்த ஆண்டு காற்றுடன் கூடிய மழை காரணமாக குளத்தின் உட்பகுதி பெரும் சேதமடைந்துள்ளது. இதனால் கூடுதலான நீரைச் சேமித்து வைக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. நீண்டகாலமாக குளத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவில்லை. அணைக்கட்டு புனரமைக்கப்படாதுள்ள நிலையில் குளம் உடைக்குமானால் குமுழ முனை கிழக்கு மக்கள் பாதிக்கப்படுவர்.

தனிக்கல் ஆற்றின் மூலம் கூடுதலான நீர் குளத்துக்குக் கிடைக்கின்றது. குளத்தின் வான் வெள்ளம் பாய்கின்ற போதோ அல்லது குளத்தின் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படுகின்றபோதோ குளத்தின் நீர் நாயாறு வழியாக கடலைச் சென்றடைகின்றது. குளத்தைப் புனரமைப்பதன் மூலமே குளத்தின் கீழ் காலபோகம், சிறுபோகம் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். எனவே குளத்தின் புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கு மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என குளத்தின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-14,13)

## கிளிநொச்சியில் இலவச நீச்சல் பயிற்சி முகாம்



கிளிநொச்சி, பெப். 9

கிளிநொச்சியில் இலவச நீச்சல் பயிற்சி முகாம் இன்று புதன்கிழமை முதல் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது என்று கிளிநொச்சி நீர் விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள நீர்த்தடாகத்தில் அனைவருக்கும் நீச்சல் பயிற்சி வழங்க அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நீர்சார் விளையாட்டுக்கழக அமைப்பின் பராமரிப்பில் கடந்த 6 மாதங்களில் 200 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீச்சல் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14,13)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். வீட்டில் தெய்வ வழிபாடு செய்வீர்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது. வீட்டில் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும். பாதிப்பு எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். மனவருத்தம் நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**துலாம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். அந்நியோன்யம் அதி கரிக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். ஆதாயம் கிடைக்கும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

**மகரம்:** குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிடிவாதப் போக்கு மாறும்.

**கும்பம்:** நினைத்த காரியத்தை எப்படியும் முடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். ஆதாயம் கிடைக்கும். எதிர்பாராத பணவரவும் பொருள்சேர்க்கையும் ஏற்படும்.

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி, மாநகரசபையின் நடமாடும் சேவை இன்று வியாழக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வட்டாரம் 19,.23 மற்றும் 26ஆம் வட்டாரங்களுக்கான ஆதனவரி அறிவித்தல் படிவம்/ சோலைவரி வழங்கல், பெயர்மாற்ற விண்ணப்பப் படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொது மக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, தண்ணீர் வரி போன்றவற்றை பெற்று யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் நடப்பாண்டின் ஆதனவரியை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் இரண்டாம் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5 வீதக் கழிவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ்.மாநகர முதல்வர் அறிவித்துள்ளார். (ப-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## காவிப்படையின் எதிர்ப்பு

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படக்கூடாது என்று பாரதூரமான எதிர்ப்பு பிக்குகளால் நேற்று வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நான்காவது அமர்வுக்கான அக்கிராசன உரையை ஜனாதிபதி ரணில் மேற்கொண்ட சமநேரத்தில், நாடாளுமன்றத்தின் நுழைவாயிலை முடக்கி– பதின்மூன்றாவது திருத்தத்தை தீயிட்டு எரித்து – மீண்டுமொரு வெறியாட்டத்தை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றது 'இராஜ்ஜியத்தைத் துறந்து சமத்துவத்தைப் பறைசாற்றிய புத்தனைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும்' காவிகள் படை. தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பதின்மூன்றாவது திருத்தம் எந்த மாற்றங்களுமின்றி முற்றாக நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அறிவித்திருந்தார். அவர் இவ்வாறு அறிவித்த நாள்முதல் ஒருவிதப் பதற்றநிலை தெற்கில் குடிகொள்ளவே செய்தது. எரியும் நெருப்பில் எண்ணெயை வாரியிறைப்பதைப்போன்று வீரசேகர, வீரவன்ஸ, கம்மன்பில உள்ளிட்டோர் ஏட்டிக்குப் போட்டியாக நின்று இனவாதத்தைக் கக்கி தமிழர் தாயகம் மலர்ந்துவிட்டதைப் போன்று மேலும் மேலும் உசுப்பேற்றல்களை மேற்கொண்ட நிலையில்தான் பிக்குகளின் இந்த எதிர்ப்புப் போராட்டம் பூதாகரமாக நேற்று வெடித்திருக்கின்றது.

இலங்கையின் பின்னடைவுகளுடனும், இன முரண்பாடுகளுடனும் இரண்டறத் தொடர்புடையவர்களாக பிக்குகள் வரலாறு நெடுகிலும் இருந்தே வந்திருக்கின்றனர். இந்த 'இணைப்பை' தவிர்த்துவிட்டு இலங்கையின் வரலாற்றைக் கதைத்துவிட முடியாத அளவுக்கு இவைதான் காட்சிகளும் கோலங்களுமாக இருக்கின்றன. இதை அவ்வளவு இலகுவாக எவரும் மறுத்துரைத்துவிட முடியாது, இந்தச் சிந்தனைப் பிறழ்வான போக்கின் தொடர்ச்சிதான் நிகழ்காலக் காட்சிகள். இது இத்துடன் முடிந்துவிடப்போகும் கதையுமல்ல.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பதின்மூன்றாவது திருத்தத்தை முற்றாக (காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் உள்ளது உள்ளபடியாக) நடைமுறைப்படுத்துவேன் என்று தெரிவித்திருந்த ஜனாதிபதி ரணில், தற்போது அந்த நிலைப்பாட்டிலிருந்து மாறியிருக்கின்றார். பொலிஸ் அதிகாரத்தை பகிர்ந்துவிடத் தான் தயாரில்லை என்பதாக அவருடைய அக்கிராசன உரை நேற்று அமைந்திருக்கின்றது. கடந்த இரு வாரங்களாக பிக்குகள் வெளிப்படுத்திய அதிருப்தியும், நாட்டின் முதன்மைப் பௌத்த பீடங்கள் பதின்மூன்றுக்கு எதிராக நேற்று மேற்கொண்ட கலந்துரையாடலும்தான் ஜனாதிபதி தன் நிலை தளர்வதற்குக் காரணமாகியிருக்கின்றன. இப்படியொரு பின்னணியில், இத்தகைய பௌத்த பீடங்களும் அதன் தலைமைகளும் பிக்குகளும் பதின்மூன்றின் அடுத்தகட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளை அனுமதிப்பார்கள்? என்ற கேள்வி எழுவது இன்று தவிர்க்க முடியாததாகின்றது. பௌத்தப் பேரினவாதம் இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் மெத்தனப்போக்கு என்று இல்லாமற் போகின்றதோ அன்றுதான் இலங்கை சுபீட்சமான எதிர்காலத்தையும் நிலைபேறான அபிவிருத்தியையும் நோக்கிப் பயணப்படும். ஆனால், இனவாதத்தையே தமது இருப்பாகவும் இருப்புக்கான நிரந்தர முதலீடாகவும் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சக்திகளிடம் அத்தகைய மாற்றமொன்று ஏற்படும் என்று எதிர்பார்ப்பதெல்லாம் கதிரவனின் உதயத்தை மேற்கில் காண்பதற்கு ஒப்பானதன்றி வேறென்ன? இலங்கைக்கான விடிவெள்ளி எம் பார்வைப் புலத்துக்கு அப்பால், தொலைதூரத்தில்கூட இல்லை என்பதே நிதர்சனம். ஆலைவாய்க் கரும்பாக நெரிபடும் சிறுபான்மையினருக்கு ஆண்டவன்தான் வழிகாட்ட வேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

"கற்பனைத் திறன் தூங்கி விடும் போது வார்த்தைகள் தமது அர்த்தத்தை இழந்து விடுகின்றன"

– ஆல்பெர் காம்யு




# தேர்தலுக்கான நிதியை விடுவிக்க உத்தரவிடுக

## உயர்நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

கொழும்பு, பெப். 9

திறைசேரி செயலாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்குத் தேவையான நிதியை விடுவிக்கத் தவறியமை குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவால் உயர்நீதிமன்றில் நேற்று வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிதியை விடுவிக்கத் தவறியமையால் தேர்தல்கள் ஆணைக்குழு பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க வாக்குமூலத்தில் பதிவுசெய்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சட்டத்துக்கு அமைவாகவும் உறுதிமொழிகளுக்கு அமைவாகவும் நடத்த நிதியமைச்சுக்கு உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு அவர் உயர்நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதேவேளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை என்பன தேர்தல் நோக்கத்துக்காக முறையே எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்குவதை உறுதி செய்ய கடமைப்பட்டுள்ளன. தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒரே தடவையில் ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியமில்லை. இந்தத் தொகையை ஒரே தடவையாகவோ அல்லது தவணையாகவோ வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்- என்றுள்ளார். (ச-இ)

# தேர்தலை நடத்த நிதியில்லை என்றால் உள்ளூராட்சிசபைகளிலிருந்து பெறுக!

## தவிசாளர் நிரோஸ் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 9

தேர்தலை நடத்துவதற்கு நிதியில்லை என்றால், உள்ளூராட்சிசபைகளில் இருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் தேர்தலை நடத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்துவரும் முயற்சியை நாங்கள் வரவேற்கின்றோம். இந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்படாமல் நடத்தப்படவேண்டும். ஆனால், பணம் இல்லை என்பதைக் காரணமாகக் கூறி தேர்தலைப் பிற்போடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என்ற காரணத்தின் அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கு உள்ளூராட்சிமன்றங்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட பணத்தைப் பெறலாம். ஏனெனில் உள்ளூராட்சி மன்றங்கள் தனியாக வருமானம் ஈட்டும் ஓர் அரச கட்டமைப்பாக இருக்கின்றன - என்றார். (ம-20)

**நாளை** 10.02.2023 வெள்ளிக்கிழமை தை 27

சுபநேரம் : 06.34 – 08.04
ராகுகாலம் : 11.04 – 12.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை நாம் ஆள்கின்ற வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேவை

## மட்டக்களப்புப் பிரகடனத்தில் வலியுறுத்து

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து, எம்மை நாமே ஆளக்கூடிய வகையில் நிரந்தரத் தீர்வு வழங்கப்பட வேண்டும். தேசிய இனப் பிரச்சினையில் மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம், தன்னாட்சியுரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வும், சர்வதேசத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படும் பொது வாக்கெடுப்பின் மூலம், தமிழ் மக்களின் ஆணை பெறப்படவேண்டும் இவ்வாறு வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட பேரணியில் 'மட்டக்களப்புப் பிரகடனம்' வெளியிடப்பட்டுள்ளது.

அந்தப் பிரகடனம் வருமாறு:

இலங்கைத்தீவின் வரலாற்றில், தமிழர்களும் சிங்களவர்களும் தம்மைத்தாமே ஆளும் சுயாதீன இராச்சியங்களைக் கொண்டிருந்தனர். 1833 ஆம் ஆண்டு கோல்புரூக் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் தம்முடைய நிர்வாக நடைமுறையை இலகுபடுத்துவதற்காக சிங்கள இராச்சியங்களும், தமிழ் இராச்சியங்களும் பிரித்தானியர்களால் இணைக்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையை முதலில் சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட வரலாற்று நிகழ்வுகளை முற்றாகப் புறந்தள்ளி எண்ணிக்கைப் பெரும்பான்மை அடிப்படையில் முழுநாட்டினதும் அதிகாரங்கள் சிங்களதேசத்திடம் கைமாற்றப்பட்டது. அதன் மூலம் தமிழர் தேசம் என்பது மழுங்கடிக்கப்பட்டு, தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து அடுத்தடுத்து வந்த சிங்கள ஆட்சியாளர்கள் எப்பொழுதும் சிங்களவர்களுக்கு கடும் தேசியவாதத்தை போஷித்தும், ஊக்கப்படுத்தியும் வந்துள்ளதோடு தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு தமது இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதில் உலகம் பாராமுகமாக இருந்து வருகிறது.

### வட்டுக்கோட்டைத் தீர்மானம்

தமிழ் மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியான சுதந்திர தமிழீழ அரசை அமைப்பதற்காக 1976 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியால் நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு, 1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் வழங்கப்பட்ட மகத்தான மக்கள் ஆணையே ஈழத் தமிழர்கள் ஜனநாயக முறையில் நடாத்தப்பட்ட ஒரு பொதுவாக்கெடுப்பில் தமது சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தியிருந்தது என்பதை சர்வதேச சமூகம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

ஒற்றையாட்சி அமைப்பைக் கொண்டு 1978 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசமைப்பானது தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாக அவர்களின் ஒப்புதல் இல்லாமலேயே நிறைவேற்றப்பட்டது என்பதை இந்தப் பிராந்தியத்தில் அக்கறையுள்ள அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### திம்புவின் வலியுறுத்து

1985 ஆம் ஆண்டு பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெற்ற அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொண்ட தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் ஆயுதப் போராட்ட அமைப்புகள் உள்ளடங்கலாக அனைத்துத் தமிழ் அரசியல் அமைப்புக்களும் ஏகமனதாக தங்களுடைய அடிப்படைக் கோரிக்கைகளாக தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் சுயநிர்ணய உரிமை என்பவற்றை முன்வைத்திருந்தமை கவனத்திற்கொள்ளப்படவேண்டும்.

ஈழத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் வழியில், தீர்வு காண்பதற்குரிய நடைமுறைகளில் முன்னேற்றம் காணப்படாததன் விளைவாக, தமிழரின் ஆயுதப் போராட்டம் தொடர்ந்ததோடு, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழரின் அரசியல் - இராணுவ பலமாக மேலெழுந்து அடுத்தடுத்து வந்த சிறிலங்கா ஆட்சியாளர்களுடன், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக பேச்சுக்கள், ஒப்பந்தங்களைச் செய்து கொண்ட போதிலும் சிங்கள ஆட்சியாளர்களின் நேர்மையற்ற அணுகுமுறைகளால் பேச்சுக்களில் தீர்வுகள் எதுவும் எட்டப்படவில்லை என்ற கசப்பான உண்மை கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

### பேரெழுச்சிப் பிரகடனம்

தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வாக தமிழர்களை ஒரு தனித்த தேசமாக, அவர்களின் பாராதீனப்படுத்தப்பட முடியாத சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது மட்டுமே, மேலே குறிப்பிட்ட அனைத்து ஒடுக்குமுறைகளும் மீள நிகழாது இருப்பதை உறுதிசெய்யும். தமிழர் தேசத்தின் வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் தங்களுடைய தனியான இறைமையை யாருக்கும் கையளித்திருக்கவில்லை என்பதைக் கருத்திற்கொண்டும், வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய இந்தப் பேரெழுச்சியின் பிரகடனமானது, தேசிய இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல்தீர்வாக, சர்வதேச சட்டத்தின் ஆட்சித் தத்துவங்களுக்கு ஏற்புடையதாகவும், மனித உரிமைகள் எல்லா நபர்களுக்கும் சமத்துவமானது என்ற அடிப்படையிலும், சுயநிர்ணய உரிமையை மதித்தும், அக்கறையுள்ள அனைத்து தரப்பினர்கள் முன்னிலையிலும் நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்குமாக முன்வைக்கப்படும் தீர்மானங்களைக் கவனத்திற்கொள்ளுமாறு இந்தப் பேரணி வலியுறுத்துகிறது.

### அரசியல்தீர்வுக்கான ஆரம்பப்புள்ளி எது?

அரசியல் தீர்வுக்கான பேச்சானது அரசமைப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன், பின்வரும் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில் இருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

1. இந்த உடன்படிக்கையானது, ஏனைய விடயங்களுக்கும் மேலாக, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, அதன் இறைமை மற்றும் தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் வரலாற்றுத் தாயகம் என்பன அங்கீகரிக்கப்படுவதோடு, முதலில் தமிழர் தாயகத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற்றப்படவேண்டும்.
2. இந்த உடன்படிக்கையானது தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதையும் உள்ளடக்கியதாக அமையவேண்டும்.
3. உடன்படிக்கை ஒருதலைப்பட்சமாக இரத்து செய்யப்பட்டால், சர்வதேச மற்றும் ஐக்கிய நாடுகள் அவையின் ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு என்பவற்றோடு, தமிழ் மக்கள் ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் தமது அரசியல் எதிர்காலத்தை தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற ஏற்பாடு இந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவேண்டும்.
4. இந்த உடன்படிகை மூன்றாம் தரப்பான சர்வதேச தரப்பினரின் முன்னிலையில் எழுதப்படவேண்டும். பாதுகாக்கப்படவேண்டிய தமிழர் அடையாளம்:

### பேச்சுக்களின் போது கவனம் கொள்ளுக!

1. தொடர்ச்சியாக, திட்டமிட்ட இனப்படுகொலைக்கு உள்ளாகி வரும் தேசம் என்ற வகையில், தமிழ் மக்கள் தமது அடையாளத்தைப் பாதுகாக்க தொடர்ந்து போராடி வருகின்றனர்.
2. தமிழ் மக்கள் இனவழிப்புக்கு முகங்கொடுத்து வரும் நிலையில், தமிழர்களின் தேசிய அடையாளத்தின் பாதுகாப்பு மற்றும் ஒரு தேசமாக இருத்தல் என்பவை சமரசத்துக்கு அப்பாற்பட்டதாகவும், உறுதியான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்.
3. முதலில், இரு தரப்பும் கூட்டாக பேச்சுக்களைச் செய்வதற்கான தெளிவான வழிவரைபடத்தை சர்வதேச மத்தியஸ்தத்துடன் தயார்செய்ய வேண்டும். இது தெளிவான அடைவுகளையும் அதன் கால அட்டவணைகளையும் கொண்டிருக்க வேண்டும்.
4. பேச்சுக்கள் இரண்டு தளங்களில் சமாந்தரமாக நடத்தப்பட வேண்டும் ஒன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்துவது மற்றையது இறுதி அரசியல் தீர்வை நோக்கியதாக இருக்கவேண்டும்.
5. உடனடிப் பிரச்சினைகள் குறித்துப் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

5.1. தொல்பொருள் ஆராய்ச்சி, வன உயிரிகள் திணைக்களம், வனவள பாதுகாப்புத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தித் திட்டம் எனும் போர்வையில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான நில அபகரிப்புத் திட்டங்களும் நிறுத்தப்படுவதோடு அபகரிக்கப்பட்ட காணிகளை உடனடியாக உரியவர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

5.2. தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அனைத்து சிங்களக் குடியேற்றங்களும் அகற்றப்பட வேண்டும்.

5.3. அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்.

5.4. உள்ளூராட்சிமன்றங்களின் எல்லை மாற்றங்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

5.5. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான சர்வதேச விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன், அவர்களுக்கு சர்வதேச நீதி வழங்கப்படுவதோடு குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

5.6. பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாகவும் நிரந்தரமாகவும் நீக்கப்படவேண்டும்.

5.7. மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள், திட்டமிட்ட இன அடக்குமுறைக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் மாணவர்கள் மற்றும் மக்கள் சமூகச் செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுதல் மற்றும் கைதுசெய்யப்படுதல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

5.8. தமிழ் மக்களின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்படுத்தும் அனைத்து வகையான அச்சுறுத்தல்களையும், தடைகளையும் நிறுத்தவேண்டும்.

5.9. காலகாலமாக நடைபெற்று வரும் தமிழின அழிப்புக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிகார நீதி வழங்கப்படவேண்டும். அத்துடன் ஐக்கிய நாடுகள் அவையால் விசேடமாக உருவாக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் விசாரணைப் பொறிமுறைகளும் அனுமதிக்கப்படவேண்டும்.

5.9.0. இறுதி அரசியல் தீர்வொன்று எட்டப்படும் வரை தமிழ் மக்கள் தமது தாயகத்தின் அன்றாட விவகாரங்களை நடாத்துவதற்கு இடைக்கால நிர்வாகப் பொறிமுறையொன்று உருவாக்கப்படவேண்டும்.

### திம்புக் கோட்பாடுகள்:

6. இறுதி அரசியல் தீர்வைக் காண்பதற்கு பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

6.1. இலங்கை அரசின் அரசியலமைப்பின் அடிப்படையாகிய ஒற்றையாட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும்

6.2. இறுதித் தீர்வுக்கான பேச்சுக்கள் ஆரம்பம் முதலே ஆக்க பூர்வமாக நடத்தப்பட வேண்டுமாயின் வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடுகள், பொங்கு தமிழ் பிரகடனம் ஆகிய வரலாற்றுப் பதிவுகள் ஊடாக தமிழ் மக்களால் முன் வைக்கப்பட்ட, அதி முக்கியமான அடிப்படைக் கோட்பாடுகளை மையப்படுத்தி, தமிழ் மக்களின் வேணவாவைப் பூர்த்தி செய்யும் தீர்வை இலக்காகக் கொள்ளவேண்டும்.

6.4. தமிழ் மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுச் சூழல் ஏற்படும் பட்சத்தில், அது சர்வதேச மத்தியஸ்தத்துடனும், வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும்.

6.5. இந்தப் பேச்சுக்களின்போது இஸ்லாமியத் தமிழ் மக்கள், மலையகத் தமிழ் மக்கள் ஆகியோரின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்.

6.6. முன்னைய பேச்சுக்களைப் போல் அல்லாமல் நடுநிலையுடனும், நேர்மையுடனும் நடுவராகச் செயற்படுமாறு சர்வதேச சமூகத்தைக் கேட்டுக்கொள்கிறோம். மேலே கூறப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறையில் திருப்திகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை ஆராய்ந்து உறுதிப்படுத்திய பின்னரே, எந்தவொரு நிதி வழங்கும் நாடுகளும் மற்றும் நிறுவனங்களும் சிறிலங்காவுக்குப் பொருளாதார உதவி வழங்கத் தொடங்கவேண்டும் என நாம் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறோம்.

### மரபுவழித் தாயகம்:

இறுதித் தீர்வை எட்டுவது என்பது, வன்முறைச் சுழற்சிகள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கும், இலங்கையில் நிலையான அமைதியை அடைவதற்கும், இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் நிலையான அமைதியை நிலைநாட்டுவதற்கும் முக்கியமாக உள்ளதென்பதை பிராந்தியத்தை அக்கறையோடு கையாளும் நாடுகள் உணர்ந்து செயற்படவேண்டும்.

ஈழத் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம், தன்னாட்சியுரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வும், சர்வதேசத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம், தமிழ் மக்களின் ஆணை பெறப்படவேண்டும் என்பதே எமது உறுதியானதும் அறுதியானதுமான நிலைப்பாடாகும். அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து, எம்மை நாமே ஆளக் கூடிய நிரந்தரத் தீர்வும் பொதுவாக்கெடுப்பில் உள்ளடக்கப்படவேண்டும் என்பதை, தமிழ் மக்கள் சார்பாக இந்தப் பிரகடனம் உலகுக்கு அறிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 90 ரூபாய். பூச்சுவேலை, கட்டு வேலைகளும் செய்து தரப்படும்.

077 334 1281 (22911) 4.6

**தேவை**

கொழும்பில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் தேவையாக உள்ளது. கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது

குறிப்பு : ஆண் வயதெல்லை: 25 - 45

077 777 5068

**சுத்திகரிப்பு தொழிலாளர் தேவை**

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரச, தனியார் நிறுவனத்திற்கு சுத்தம் செய்வதற்கு சுத்திகரிப்பு தொழிலாளர்கள் தேவை.

077 623 9122

# பல்கலை கிளிநொச்சி வளாக விநாயகர் ஆலய குடமுழுக்கு



கிளிநொச்சி, பெப். 9

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் கட்டப்பட்ட ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி கனகாம்பிகை அம்பாள் ஆலய பிரதம குரு தலைமையில் விநாயகப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் குடமுழுக்கு செய்யப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜா உள்ளிட்ட பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் பங்கேற்றனர். (ச-113)

**தேவை**

யாழ்ப்பாணம், கொழும்பு பேருந்து சேவைக்கு ஆசனப் பதிவாளர் தேவையாக உள்ளது. கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது

குறிப்பு : ஆண் வயதெல்லை: 25 - 45

077 777 5068

**தவறிவிட்டது**

பிரபாகரன் மகின்சலா ஆகிய எனது வாகன ஆவணங்களும் அத்துடன் அருளம்பலம் பிரபாகரன் ஆகிய எனது வாகன அனுமதிப்பத்திரம், அடையாள அட்டை ஆகியன நீர்வேலி பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் நீர்வேலி தபால் கந்தோரிலோ அல்லது நேரிலோ வழங்கி உதவுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தொடர்பு: 077 6080 862

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

Jaffna International Trade Fair

13th EDITION

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

jitf.lk

www.jitf.lk

CONCURRENTLY WITH

Higher Education & Career Exhibition

KALVI JAFFNA 2023

JITF 2023

MARCH மார்ச்

3 4 5

9.00 மு.ப - 7.00 பி.ப

Muttraweli Grounds (Next to Jaffna Fort)

முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

MAIN SPONSOR: TOKYO CEMENT GROUP

CO SPONSOR: Maliban Inspiring Goodness

ORGANIZED BY: LECS LANKA EXHIBITION

IN ASSOCIATION WITH: CCIY

OFFICIAL PARTNERS: SNACK, SPICE, ILLUMINATION, HYGIENE, T-SHIRT, PRINT MEDIA, EDUCATION, TYRE, RENEWABLE ENERGY, RIDING

SUN, உதயன், NorthernUNI, AROMA, Hayleys Fentons

ஸ்டால்களுக்கான முன்பதிவு

RESERVATION FOR STALLS

Imalka: +94 71 7488107, +94 77 1093792 | imalka@saexhibitions.com

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப்.9

காங்கேசன்துறை மயிலிட்டி வடக்கு ஆதி மயிலிட்டி ஸ்ரீ பூதநாயகி சமேத காசிப் பூதராயர் ஆலய சங்காபிஷேகம் நாளை வெள்ளிக் கிழமை ஸ்தானிக குருமணி பிரம்மஸ்ரீ சோ.ரவிச் சந்திரசர்மா தலைமையில் இடம்பெற வுள்ளது. அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி யாகபூசை, விசேட திரவிய ஹோமம், தீபாராதனை ஆகியவற்றை தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் மகா சங்காபிஷேகம் நடைபெற வுள்ளது. மாலை 6 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் திருவூஞ்சல் உபயமும் இடம் பெறவுள்ளன என ஆலய நிர்வாகசபை அறிவித்துள்ளது. (ச)



**இணுவில் திருப்பதி**

**அருள்மிகு திரு வேங்கடேஸ்வரர் ஆலயம்**

**இணுவில் மருதனார் மடம்**

**மகாயாகமும் இலட்சார்சனையும்**

- காலம் : 10.02.2023 முதல் 19.02.2023 வரை
- நேரம் : மாலை 4.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை

**கோவிந்த அடியார்களே!**

உலக வாழ் மக்கள் நன்மை கருதி வருடம் தோறும் எமது ஆலயத்தில் நாராயணரின் திருவருளால் மிகவும் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

- 10.02.2023 - 1 ஆம் நாள் - மகாசுதர்சன ஹோமம்
  பயன் :- பலவகை தடைகள் நீங்க
- 11.02.2023 - 2 ஆம் நாள் - கயக்கிரீவ ஹோமம்
  பயன் :- ஞானமும் கல்வியும் சிறக்க
- 12.02.2023 - 3 ஆம் நாள் - தன்வந்திரி ஹோமம்
  பயன் :- நோய் நொடிகள் நீங்க
- 13.02.2023 - 4 ஆம் நாள் - இலக்ஷ்மி நரசிம்ம ஹோமம்
  பயன் :- செல்வ கடாஷம் பெற / தீயசக்திகள் விடுபடல்.
- 14.02.2023 - 5 ஆம் நாள் - சந்தான கோபால ஹோமம்
  பயன் :- குழந்தை செல்வம் பெறுவதற்கு
- 15.02.2023 - 6 ஆம் நாள் - இலக்ஷ்மி ஹோமம்
  பயன் :- செல்வம் பெறுவதற்கு
- 16.02.2023 - 7 ஆம் நாள் - நாராயண சூக்த ஹோமம்
  பயன் :- சர்வசித்தி பெறல்
- 17.02.2023 - 8 ஆம் நாள் - சம்பரண சூக்த ஹோமம்
  பயன் :- நாட்டில் உள்ள குழப்பங்கள் நீங்க
- 18.02.2023 - 9 ஆம் நாள் - விஷ்ணு சகஷ்ர நாம ஆலங்கார ஹோமம்
  பயன் :- சர்வசித்தி பெற
- 19.02.2023 - 10 ஆம் நாள் - பகவத் கீதாஹோமம் மகாயாக பூர்த்தி

**காலை 6.00 மணிமுதல் பகவத் கீதாஹோமம் சகல யோகங்களும் சித்திகளும் பெறுவதற்கு, ஞானம் பெறுவதற்கு, மன அமைதி பெறுவதற்காக நடைபெறும் மகாயாகம், பகவத் கீதையிலுள்ள 18 அத்தியாயங்களுக்கும் 18 பூர்ணாகுதிகளும் சுலோகங்களும் நடைபெறவுள்ளது.**

**குறிப்பு:** அடியார்கள் ஹோமத்திற்கு தேவையான பொருள்களைக் கொடுத்து விஷ்ணு காரியத்தில் இணைந்து கொள்ளும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்

தொடர்பு: 021 224 2300 (cs.23406) (2.6)

ஆலய தர்மகத்தா ச.கணேசலிங்கம்

**10ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர் **சதாசிவம் தெட்சணாமூர்த்தி** (ஓய்வுபெற்ற முதலியார்)



தோற்றம் 16.08.1947 மறைவு 30.01.2013

திதி: சங்கடஹரசதுர்த்தி

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
என்னுயிர்த் தெய்வமே!
விண்ணுலகம் சென்று இன்று பத்து ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்கா நினைவுகளுடன் உங்கள் மனைவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கஜபதி செட்டிலேன், இணுவில் மேற்கு, இணுவில்.

மனைவி - சிவயோகமணி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
28
10
1950



இறப்பு
08
02
2023

## திருமதி மேரி அசுன்ரா செபமாலை (ஜசிந்தா)

யாழ்ப்பாணம் கோவில் வீதியை பிறப்பிடமாகவும், இல.35, மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி அசுன்ரா செபமாலை (ஜசிந்தா) அவர்கள் நேற்று (08.02.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சூசைப்பிள்ளை செபமாலை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை மரியாம்பிள்ளை - திரேசா மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து சூசைபிள்ளை - சவரிமுத்து மரியரோசா ஆகியோரின் அன்பு மருமகளும், செறின் வேஜினியா (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜெறி ஸ்ரலின் (ICT Officer - தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பியந்தனின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேச செயலகம்) அன்பு மாமியாரும், டானியல், ஜெமிமா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மேரி மாகிறட் (வசந்தா-ஜேர்மனி), மேரி ஸ்ரெலா (சாந்தா), யூலியற் புஸ்பம் (புஸ்பா- ஜேர்மனி), மரியதாஸ் (இளைப்பாறிய ஆசிரியர் - யா/மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (09.02.2023) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
ஜெறி ஸ்ரலின் (மகன்)
077 143 8849

(CS 23419) 1-6

# மரண அறிவித்தல்

பிறப்பு
06
11
1925



இறப்பு
05
02
2023

## கந்தையா கார்த்திகேசு

(ஓய்வுபெற்ற அதிபர்)

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கார்த்திகேசு அவர்கள் கடந்த (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லையா இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், உதயகுமார் (இத்தாலி), சுந்தரகுமார் (சுவிஸ்), கோகிலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மசோதி, பிரசாந்தினி, விக்னேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற வர்களான நடராசா, கனகசபாபதி, சரஸ்வதி மற்றும் நல்லம்மா, காலஞ்சென்ற உமையம்மை மற்றும் இராமநாதன், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மீனாட்சிப்பிள்ளை மற்றும் இரஞ்சினிதேவி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பாலச்சந்திரன் மற்றும் நவரத்தினதேவி, புனிதவதி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் பகவதி காலஞ்சென்ற தங்கராசா மற்றும் நல்லம்மா, சிவஞானம், காலஞ்சென்ற கேதாரம் ஆகியோரின் மைத்துனரும், லிரோஷன், விதுனா, விதுரா, அபிசரன், அபிசிகா, அபினா, அபினேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே:076 211 7035

(CS 23415) 1-6

# கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் ஆங்கில பாட ஆசிரியை
திருமதி துஷிகா ஸ்ரீகரன் அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் சுப்பிரமணியம் தில்லைநாதன்**

அவர்கள் கடந்த (10.01.2023) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வயாவிளான் ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாலய சமூகம்

# நீங்கா நினைவில்

21ஆம் ஆண்டு

மலர்வு
27.04.1938



உதிர்வு
01.02.2002

**அமரர் வெ.வேலு**
(கந்தையா)
(ஓய்வு பெற்ற மின் கம்பி இணைப்பாளர்)

27ஆம் ஆண்டு

அன்னை மடியில்
21.02.1977



அமலன் அடியில்
13.06.1996

**செல்வன் வேலு சனகன்**
(முன்னாள் மாணவன்
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

திதி: 09.02.2023

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள் இருவரினதும் நினைவுகளோடு கலந்து வாழும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு திவச அழைப்பு



கடந்த (22.01.2022) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர்
**கதிர்காமு மகாலிங்கம்**
அவர்களின் முதலாம் ஆண்டுத் திவசம் இன்று (09.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெறுவதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீனாட்சி அம்மன் கோவில் வீதி
சங்கத்தானை ,சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
10
08
1931



மறைவு
07
02
2023

## திருமதி நடராசா பாக்கியம்

கொக்குவில் கிழக்கு, நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா பாக்கியம் நேற்றுமுன்தினம் (07.02.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை நடராசாவின் துணைவியாரும், நவபாலன் (கனடா), காலஞ்சென்ற நவமோகினி, நவமோகன், நவராஜசிங்கம் (சுவிஸ்), நவறஞ்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சசிகலா, பாக்கியலட்சுமி, தியாகராஜன், குமுதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சர்மிலி, விதுசன், தினேஷ், கிருஷாயினி, அபிராமி, அரவிந், அர்ச்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 246, நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.
077 064 1342

தகவல்:
குடும்பத்தினர்

(cs 23407) (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி



யாழ்ப்பாணம், கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும்
கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர் சீமாட்டி திருமதி
உதயகுமாரி (தங்கா) ரவீந்திரராஜா
(ரவி இன்வெஸ்ட் மென்றல் பிறைவேற் லிமிட்டட் (நிர்வாகி)
சஹானா என்ரபிறைஸ், U.S.A ரேடிங் கம்பனி
உதயா மேர்ச்சன்றஸ் - உரிமையாளர்)



இங்கிதப் பேச்சு. இனிய சுபாவம்
கடமையில் உறுதி, காருண்ய மனப்பாங்கு....
தொண்டு செய் உள்ளம் .... இவற்றால் எமை
அரவணைத்துக் காத்து நின்றீர்!
நல்மனம் கொண்டெமக்கு
நல்வழி காட்டி நின்று ... எமைப்
பெருமையாய் வாழ வைத்துப்
பேருவகை அடைந்தீர் நீர்!
பாரிய சிக்கல் எதனையும்
தீர்த்திடும் பக்குவம்பெற்றீர்!
பொறுமையாய் அவற்றை வென்று
பூரித்துப் பொலிந்து நின்றீர்!
காலனவன் நின்னுயிரைக் கவர்ந்த அன்று....
"அப்பா" என எனை அழைத்தணைத்து
என் மடியில் சாய்ந்தீரே... அந்தவொரு கணம்
மனதை விட்டகல மறுத்தாலும் ஆண்டொன்று கழிந்ததுவே!
இல்லத்தலைமை இவர்க்கு... இங்கினிப் போதுமென்று
தரணிதனில் பாதியிலே எமை விட்டு ஈசன்
பாத நிழல் தஞ்சமென்றா சென்றீர்!
எப்பிறப்பில் உமைக் காண்போம் இனி?

தோற்றம் 08.07.1954 மறைவு 21.01.2022
ஆண்டுத் திதி: 09.02.2023

79/6, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
071 220 3568

கணவர், பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்

(cs.18353) (2.6)




# துருக்கி நிலநடுக்கம்
# பலி 9,500!

**அங்காரா, பெப். 9**

**துருக்கி - சிரிய எல்லைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை பின்னிரவு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 500ஆக அதிகரித்துள்ளது.**



சிரிய - துருக்கி எல்லைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இரு நாடுகளிலுமாகச் சேர்த்து சுமார் 6 ஆயிரம் கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன. பேரிடர் நிகழும்போது மக்கள் ஆழ்துயிலில் இருந்ததால் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. நேற்று மாலை வரையிலான அறிக்கைகளின் அடிப்படையில் சுமார் 9 ஆயிரத்து 500 பேர் இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்துள்ளனர். இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர்க்கால அடிப்படையில் 22 நாடுகளின் மீட்புக் குழுக்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. மீட்புக்குழுக்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையின் அடிப்படையில் உயிரிழப்பு எண்ணிக்கை 15 ஆயிரத்தைத் தொடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. 6 ஆயிரம் கட்டடங்கள் சேதமடைந்துள்ள நிலையில் சுமார் 55 வீதமான இடிபாடுகளிலேயே தற்போது வரையில் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால்தான் உயிரிழப்பு எண்ணிக்கை 15 ஆயிரத்தைத் தொடும் என்று மீட்புக் குழுவினரின் கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆயிரமாக அதிகரித்துள்ளது. அவர்களில் நூற்றுக்கணக்கானவர்களின் நிலைமை கவலைக்கிடம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிரியாவுக்குப் பின்னடைவு

உள்நாட்டுப் போர் காரணமாக கடந்த 12 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டு வந்த சிரியா, மெல்ல மீண்டு கொண்டிருந்த நிலையில், அந்தநாட்டு மக்களை இந்த நிலநடுக்கம் மீண்டும் பெருந்துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

போரால் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்த சிரியாவின் வடக்குப் பகுதி மக்கள், இந்த பூகம்பத்தால் மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று சர்வதேச அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ம)

## 24 மணிநேரத்தில் 312 தடவைகள் நிலநடுக்கம்!

அங்காரா, பெப். 9

துருக்கியில் கடந்த திங்கட்கிழமை பூகம்பம் ஏற்பட்ட பின்னர், அந்தப் பகுதியில் 314 தடவைகள் சிறு நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன என்று சர்வதேச புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த சிறு நில அதிர்வுகளால் மீட்புப் பணிகள் தாமதமாகவும், கட்டட இடிபாடுகள் மேலும் இறுக்கமாகி இறப்புகள் அதிகரிக்கவும் காரணமாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத்தரணி ரெமீடியஸ் விபத்தில் சிக்கி காயம்!

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினரும், சட்டத்தரணியுமான மு.ரெமீடியஸ் விபத்தில் சிக்கி காயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டிப் பகுதியில் இந்த விபத்து நேற்று மாலை நடந்துள்ளது. வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் சட்டத்தரணி பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தின்போது அவரது தலைக் கவசம் கழன்றதால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் நின்றவர்கள் நோயாளர் காவு வண்டி மூலம் அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள சட்டத்தரணி ரெமீடியஸுக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. (எ-இ)

# வயல்களில் கடும் வெள்ளம்; அறுவடைக்கு அதிக செலவு!

### விவசாயிகள் கவலை

சாவகச்சேரி, பெப்.9

வயல் நிலங்களில் வெள்ளம் சூழ்ந்து காணப்படுவதால் அதிக கட்டணம் செலுத்தி அறுவடை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என தென்மராட்சி நெற்செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நெல் அறுவடைக்குத் தயாரான நிலையில் கடந்தவாரம் திடீரென பெய்த மழையால் வயல் நிலங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. வெள்ளத்தை வெளியேற்றநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் நெற்பயிர்கள் வெள்ளத்தில் சரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

முன்பதாக அறுவடை செய்வதற்கு இயந்திரக்கட்டணமாகபரப்புக்கு 500ரூபாகட்டணம் அறிவிடப்பட்டது. தற்போது வெள்ளத்தினுள் அறுவடைசெய்யும்வேளையில் எரிபொருள் நுகர்வு அதிகமாக காணப்படுவதால் கட்டணத்தைபரப்புக்கு ஆயிரம்ரூபாவாகஅறுவடைஇயந்திரஉரிமையாளர்கள் கோருகின்றனர்.

நெற்கதிர்கள் வெள்ளத்தில் சாய்வதற்கு முன்னர் அறுவடை செய்யவேண்டியுள்ளதால் அதிக கட்டணம் செலுத்தி அறுவடை மேற்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ச-9)

### மருத்துவர்கள்...

மருத்துவ நெருக்கடியை நீக்க வலியுறுத்தியும் நேற்றுக் காலை முதல் 24 மணி நேரப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் மருத்துவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

அவசர நோயாளர் பிரிவு, நோயாளர் விடுதி, விபத்துப்பிரிவு, சத்திரசிகிச்சை பிரிவு உட்பட்ட சில சேவைகளில் மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ சேவைகளே வழங்கப்பட்டன. அதனால் மாதாந்த கிளினிக் சிகிச்சைக்கு வந்தவர்களும், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்தவர்களும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதைக் காணமுடிந்தது.

சுகாதாரம், மின்சாரம், துறைமுகம், பெற்றோலியம், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கம் உள்ளிட்ட 40க்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று இந்தப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மருத்துவமனைகளிலும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-எ-110-9)

### இருநாள்...

யுள்ளது. அறுவடைக்குத் தயராக இருந்த நெற்பயிர்களே மழையால் அழிவடைந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த பெரும்போகத்தில் 22 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மழையால் அழிவடைந்துள்ள நெற்செய்கையைக் கணக்கிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆர்.பரணிகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

எரிபந்த நோய்த் தாக்கம் காரணமாகவும் விளைச்சல் ஒரு ஏக்கருக்கு 15 மூடைகள் என்ற அளவில்தான் காணப்பட்டது. இந்த மாத ஆரம்பத்தில் பெய்த மழையால் அறுவடைக்குத் தயாராகவிருந்த நெற்பயிர்கள் அழிந்துள்ளன.

ஒட்டுசுட்டானில் 530 ஏக்கரும், புதுக்குடியிருப்பில் 380 ஏக்கரும், முள்ளியவளையில் 318 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய், ஒலுமடு, குமுழமுனை, உடையார்கட்டு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையுடன் சேர்த்து ஆயிரத்து 518 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று முதற்கட்ட மதிப்பீட்டு அறிக்கை மூலம் அறியமுடிகின்றது.

இழப்பீடுகளுக்கான மதிப்பீடுகளை மதிப்பிடவேண்டும் என்று மதிப்பிடும் தலைவரான பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அழிவுகளை முழுமையாக மதிப்பீடு செய்து, விவசாயிகள் இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான, காப்புறுதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (அ-எ-19)

### 13ஐ எரித்த...

துள்ள நிலையிலேயே, அமைதியை சீர்குலைக்கும் '13' நாட்டுக்குத் தேவையில்லை என வலியுறுத்தி இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

'பொலிஸ், காணி அதிகாரங்களை உள்ளடக்கிய 13 வேண்டாம்' என்ற தொனிப்பொருளில், ஜெயவர்த்தனபுர பரகும்பா பிரிவேனாவிலிருந்து ஆரம்பமான பேரணியில் மூன்று பௌத்த பீடங்களைச் சேர்ந்த பிக்குகள் பங்கேற்றிருந்தனர்.

பேரணியாக நாடாளுமன்றத்தை நோக்கிச் செல்ல முற்பட்ட பிக்குகளை, பொல்துவ சந்தியில் பொலிஸார் இடைமறித்தனர். எனினும் முன்னோக்கிச் செல்வதற்கு பிக்குகள் முற்பட்டனர். அதற்கு பொலிஸார் இடமளிக்காததை அடுத்து அங்கு சற்று பதற்ற நிலை உருவானது.

அதன்பின்னர் அந்த இடத்தில் பிக்குகள் கூட்டமொன்றை நடத்தி 13 ஆவது திருத்தச்சட்டத்தை தீ வைத்துக் கொளுத்தினர்.

"வடக்கு - கிழக்கு மக்களுக்கு கல்விப் பிரச்சினை உள்ளது. வறுமை உள்ளது. அவர்கள் 13 ஐக் கோரவில்லை. நாட்டில் அமைதியை சீர்குலைக்கும் 13 தேவை இல்லை. அது நீக்கப்பட வேண்டும். 13 ஐ நடைமுறைப்படுத்த முற்பட்டு தேசத்துரோகி ஆக வேண்டாம் என ஜனாதிபதியிடம் வலியுறுத்துகின்றோம்" - என்று போராட்டத்தில் ஈடுபட்ட பிக்குகள் தெரிவித்தனர். (அ-எ-44)

### புதிய...

எனக்குத் தேவை இந்த நாடு அடைந்துள்ள நெருக்கடியில் இருந்து மீளக்கட்டியெழுப்புவதே. அதற்காக நான் மக்கள் விரும்பாத பிரபலமற்ற தீர்மானங்களை எடுப்பேன். இந்தத் தீர்மானங்களின் பெறுமதியை இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளில் புரிந்து கொள்வீர்கள் -இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய கொள்கை விளக்க உரையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வரி செலுத்த வேண்டிய வருமான எல்லையை ஒரு இலட்சம் ரூபாவிலிருந்து இரண்டு இலட்சம் ரூபா வரை அதிகரிக்கவேண்டும் என்று சிலர் கூறுகின்றார்கள். உழைக்கும்போதே வரி செலுத்தும் முறையை நீக்கவேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். நாம் விருப்பத்துடன் இந்த வரிகளை விதிக்கவில்லை. ஆனாலும் எமக்கு விருப்பமானவற்றைச் செய்து நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது. நாம் விரும்பாவிட்டாலும் சரியானதைச் செய்யவேண்டும்.

உழைக்கும் போதே செலுத்தும் வரியை நீக்கினால் நாடு 100 பில்லியன் ரூபாவை இழக்கும். வரி எல்லையை இரண்டு இலட்சம் வரை அதிகரித்தால் நாடு 63 பில்லியன் ரூபாவை இழக்கும். இழக்கப்படும் மொத்தத் தொகை 163 பில்லியன் ரூபாவாகும். இவ்வளவு பெரும் தொகையை இழக்கும் நிலையில் நாம் இல்லை. வரி முரண்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போது ஒட்டுமொத்த மக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமை குறைவடையும்.

கிரேக்கம் சில காலங்களுக்கு முன்னர் எம்மைப் போன்றதொரு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. வங்குரோத்து நிலை அடைந்தது. நெருக்கடியிலிருந்து மீளுவதற்காக அரச ஊழியர்களின் சம்பளத்தை 50 சதவீதமாகக் குறைத்து வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டும் மீண்டும் கடன்களைச் செலுத்தும் பலத்தை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு 13 ஆண்டுகள் சென்றது. அந்தக் கால எல்லைக்குள் மூன்று தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி ஒத்தாசைகள் பெறப்பட்டன.

நாம் பயணிக்கும் இந்தத் திட்டத்தின் பிரகாரம் முன்னோக்கிச் சென்றால் 2026 ஆம் ஆண்டளவில் வங்குரோத்து நிலையிலிருந்து மீள முடியும். நான் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டவாறு நாட்டைக் கட்டியெழுப்பும் போராட்டத்துக்கு இந்த நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்தால், எமக்கு அதற்கு முன்னரே இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் - என்றார். (அ-எ-இ)


31ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 28.01.1936

மறைவு 09.01.2023

அமரர்

கமலாம்பிகை கிருஸ்ணசாமி

அன்பெனும் பிடியில் அகப்படுத்தி எமையெல்லாம்
அரவணைத்த எம் குலவிளக்கே
ஆறுதல் தேறுதல் சொல்லி
எமை வாழ வைத்தெல்லாம் மறந்து
எங்கு சென்றாய் சகோதரியே
உங்கள் அன்பு முகம், ஆசை மொழியெல்லாம்
இனி எங்கு காண்போம் மாமி
உம் நல்ல உள்ளம் ஆத்மா சாந்தியடைய
நாளெல்லாம் வேண்டுகின்றோம்
இறைவனை நாம்

உமை இழந்து தவிக்கும்
அன்புச் சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

முந்திரிகைத் தோட்டம்,
கோப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு.

(CS 23417) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர...

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய கொள்கை விளக்க உரையிலேயே ஜனா திபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- நாம் பிரச்சினைகளுக்கு வழிவிட்டோமே தவிர நீண்டகாலத்தீர்வைத் தேடவில்லை. அதன் விபரீதத்தைத்தான் நாம் அனை வரும் இன்று அனுபவிக்கின்றோம்.

நாம் இன்று ஒரு பொருளாதார யுத் தத்தை எதிர்நோக்கி உள்ளோம் என் பதை நினைவில் கொள்ளவும். இந்த யுத்தம் வடக்கு - கிழக்கு யுத்தத்தை விட ஒரு தீர்க்கமான யுத்தமாகும். வடக்கு - கிழக்கு மோதலில் இனங்கள் பிளவுபட் டன. இந்த யுத்தத்தில் அனைத்து இனங் களும் ஒன்றாக இணைந்து போராட வேண்டியுள்ளது.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் விடுவோமாயின் இந்தப் பொருளாதார யுத்தத்தில் நாம் தோல்வியடைவோம். அவ்வாறு இடம்பெறுமாயின் சில அரசி யல் கட்சிகள் கூறுவது போன்றதொரு கற்பனை உலகம் எமக்கு உரித்தாகாது. நாம் பொருளாதார காலனித்துவத்துக்கு உட்படுவோம். நம் அனைவரதும் பொறுப்பு யாதெனில் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு பொருளாதார யுத் தத்தை வெற்றிகொள்வதற்குத் தேவை யான ஒத்துழைப்பை வழங்குதல் ஆகும்.

பொருளாதார யுத்தத்தை வெற்றி கொள் வதற்கும் அதன் பின்னர் அபிவிருத்தி யடைந்த பொருளாதாரம் ஒன்றை எமது நாட்டில் உருவாக்குவதற்கும் இனங்க ளுக்கு இடையில் ஒற்றுமையும் சமாதா னமும் முக்கியமானதாகும்.

இந்தமுறை அரசியல் தீர்வுக்கான முயற்சியை வெற்றியடையச் செய்வ தற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதற் காக உங்கள் அனைவரினதும் (நாடா ளுமன்ற உறுப்பினர்கள்) ஒத்துழைப் பையும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

வடக்கு - கிழக்கு யுத்தம் முழு நாட்டை யும் பாதித்தது. பல பிரதேசங்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. வடக்கு மாகா ணம் முழுமையாகவும், கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் பல பிரதே சங்களும் யுத்தம் காரணமாக பெரும் துன்பங்களை அனுபவித்தன. இந்தப் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர் பாகக் கூடுதலான கவனம் செலுத்தப் பட்டு செயற்படுவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். அந்தப் பிரதேசங் களுக்கான விசேட திட்டம் ஒன்றை நடை முறைப்படுத்துவோம் - என்றார். (அ-எ-22)

## அரசியல்...

சிறைவைக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றி யும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய கொள்கை விளக்க உரையிலேயே ஜனா திபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- எந்தவொரு வழக்கு விசாரணையும் இன்றி பல ஆண்டுகளாக அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். படிப்படியாக இந்த சிறைக்கைதிகளை விடுவிப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

மத்திய அரசாங்கத்தின் சில நடவடிக்கை கள் காரணமாக கல்வி மற்றும் சுகாதா ரத் துறைகளில் மாகாணசபைகளின் அதிகாரங்கள் குறைவடைந்துள்ளன என்று குற்றம் சாட்டப்படுகிறது. மாகாண அதிகாரங்களை நடைமுறைப்படுத்து வது தொடர்பில் நாம் புதிய சட்டங்க ளைக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க் கின்றோம் - என்றார். (அ-எ-இ)

## பேரணியில்...

யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று மதியம் சிவத்திரு ஆதீனத்தில் வைத்துத் தன்னிடம் வழங்கப்பட்டது என வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

எதிர்வரும் 20ஆம் திகதி விசாரணைக்கு வரவேண்டுமென அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, பொங்கல் நிகழ்வுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப் பாணம் வந்திருந்தபோது எதிர்ப்பு நட வடிக்கையில் ஈடுபட்டமைக்காக வேலன் சுவாமிகள் அண்மையில் கைது செய் யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக் கப்பட்டிருந்தார். (அ-எ-இ)

## வரிக் கொள்கைக்கு...

முறையற்ற வரி விதிப்பினூடாக அரசு பொதுமக்களைத் துன்பத்தில் ஆழ்த்தி யுள்ளமைக்கு எதிராக நேற்று ஆர்ப் பாட்ட தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. சுகாதாரம், மின்சாரம், துறைமுகம், பெற்றோலியம், பல்கலைக்கழக விரிவு ரையாளர்களின் சங்கம் உள்ளிட்ட 40க்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு நடவடிக்கை யில் ஈடுபட்டன.

இதற்கு இணையாக அரச, தனியார் துறை மருத்துவர்கள் 24 மணித்தியால தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெ டுத்துள்ளனர் என தொழில் வல்லுநர் களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒரு பிரிவான அரச மருத்துவ அதிகாரி கள் சங்கம் தெரிவித்தது.

அரச நிறைவேற்று அதிகாரிகளின் ஒன் றிணைந்த எதிர்ப்பு நடவடிக்கை காரண மாக கொழும்பு லோட்டஸ் வீதியில் போக் குவரத்து மட்டுப்படுத்தப்பட்டது. ஆர்ப் பாட்டம் காரணமாக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக வாகனப் போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டது.

அதேநேரம், புதிய வரிக்கொள்கைக்கு எதிராக இலங்கை மின்சாரசபை ஊழி யர்கள், கொழும்பு கோட்டை மின்சார சபை தலைமைகத்துக்கு முன்பாக எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

நியாயமற்ற வரிக்கொள்கைக்கு எதிரான போராட்டங்கள் கொழும்பு கோட்டையின் பல்வேறு வீதிகளில் முன்னெடுக்கப்படு வதற்கு தடையுத்தரவு பிறப்பிக்க வேண் டும் என்று கோட்டை பொலிஸார் விடுத்த கோரிக்கையை கோட்டை நீதிவான் நீதி மன்றம் நிராகரித்தது.

அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரி மைகளுக்கு அமைவாக அமைதியான போராட்டங்கள் மற்றும் பேரணியை முன்னெடுக்க முடியும் என்று கோட்டை நீதிவான் திலின கமகே சுட்டிக்காட்டினார்.

அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் யாராவது செயற்படும் பட்சத் தில், பொலிஸாருக்கு உள்ள அதிகாரங் களுக்கு அமைய செயற்படவேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார்.

கொழும்பின் பல்வேறு வீதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவ தற்குத் தடையுத்தரவு பிறப்பிக்க வேண் டும் என்று கறுவாத்தோட்டைப் பொலி ஸார் விடுத்த கோரிக்கையையும் நீதி மன்றம் நிராகரித்தது.

அதன்பின்னர் பௌத்தாலோக மாவத்தை, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, தேர்ஸ்டன் வீதி, ஏனர்ஸ்ட் டி சில்வா மாவத்தை உள்ளிட்ட வீதிகளுக் குள் பிரவேசிப்பதைத் தடுக்கும் வகை யில் தடை உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று கொழும்பு பிரதம நீதிவானிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கையை நிராகரித்த கொழும்பு பிரதம நீதிவான் பிரசன்ன அல்விஸ், பொலிஸாருக்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரங்களுக்கு அமைய செயற்படவேண்டும் என்றும் உத்தரவிட் டார். (அ-எ-22)

## பொருளாதார...

தேவையான சிகிச்சைகளை மேற் கொள்ள வேண்டியுள்ளது. ஆயினும் சிலர் முன்னர் சிகிச்சை வழங்கிய மருத் துவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

-இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய கொள்கை விளக்க உரையிலேயே ஜனா திபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- நோயாளியைக் குணப்படுத்துவதற்கு நான் முயற்சி செய்து வருகின்றேன். நோயாளியைக் குணப்படுத்திய பின்னர் எம்மால் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும். நாம் நோயாளி யைக் குணப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும். நான் அதையே தற் போது மேற்கொள்கின்றேன்.

நோயாளியை கவலைக்கிடமான நிலை யில் இருந்து மீட்டெடுத்தவுடன் நாம் மற்றுமொரு நடவடிக்கையை மேற் கொள்வோம். மீண்டும் இவ்வாறான ஒரு நெருக்கடி ஏற்படக்கூடிய அனைத்து வழிகளையும் தடைசெய்தலே அந்த நடவடிக்கை. இந்த நோக்கத்துக்காக நாம் ஊழல்களைத் தடுக்கும் சட்டத் தைக் கொண்டுவருவோம். சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திய இணக்கப்பாட்டுக்கு அமைய உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப் புடன் இணைந்து 'திருடப்பட்ட சொத்துக் களை மீண்டும் கண்டறியும் முயற்சியை' இந்தச் சட்டத்தில் உள்ளடக்குவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப் பாடு கிடைத்தபின்னர் எமக்கு பொருளா தாரத்தை ஓரளவு ஸ்திரத்தன்மைக்கு கொண்டுவரமுடியும். ஆனால், நோயை முற்று முழுதாகக் குணப்படுத்த வேண்டு மாயின் எமக்கு முன்னோக்கிய சில நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி யுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உறுதிப் பாடு கிடைக்கப்பெற்றவுடன் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற ஏனைய சர்வதேச நிறுவனங்களிடம் கடனுதவிகள் பெறுவது தொடர்பில் எதிர் பார்ப்பை ஏற்படுத்திக்கொள்ளமுடியும். அதனால் முதலீட்டாளர்களின் நம் பிக்கை உறுதி செய்யப்படும். அந்நியச் செலாவணி நாட்டுக்கு பாய்ச்சப்படும் போக்கு ஏற்படும். நாம் அந்த உதவிகளை உரிய முகாமைத்துவத்துடன் நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்துதல் வேண்டும் - என்றார். (அ-எ-இ)

## தேர்தலில்...

அந்த ஆணையின்கீழ் ஜனாதிபதி பதவி வகிக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 13 தொடர்பில் செயற்படுவதற்கு எவ்வித உரிமையும் கிடையாது.

இவ்வாறு பேராசிரியர் மெதகொட அபய திஸ்ஸ தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத் துக்கு எதிராக கொழும்பில் நேற்று நடை பெற்ற பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ரணில் விக்கிரமசிங்க என்பவர் இந் நாட்டைப் பிரிப்பதற்கென்றே பிறந்தவர். 69 லட்சம் பேர் வழங்கிய மக்கள் ஆணை யின் கீழேதான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியை வகிக்கின்றார்.

13 அற்ற, பிரிவினைவாதம் அல்லாத புதியதொரு அரசமைப்புக்கே அந்த மக் கள் ஆணை வழங்கினர். மாறாக 13 ஐ நடைமுறைப்படுத்துவதற்கு அல்ல. நாட்டில் ஏற்பட்ட சிற்சில சம்பவங்களால் ஜனாதிபதி பதவி விலகினார். அந்த இடத் துக்கு வந்துள்ள ரணில் விக்கிரமசிங்க வுக்கு 13 தொடர்பில் நடவடிக்கை எடுப்ப தற்கு எவ்வித உரிமையும் கிடையாது.

13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்து வேன் என்று உறுதியளித்துவிட்டு ரணில் தேர்தலில் இறங்கவேண்டும். அப்போது அதற்கு மக்கள் எப்படி தீர்ப்பை வழங்கு வார்கள் என்பதை பார்ப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். 13 விடயத் தில் மகாநாயக்கர்கள் மற்றும் மகாசங் கத்தினரின் கோரிக்கை ஏற்கப்பட வேண் டும் - என்றார். (அ-எ-44)

## காணிகள்...

அந்தப் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பில் கூடுதலாகக் கவனம் செலுத் திச்செயற்படுவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம். அந்தப்பிரதேசங்களுக்கான விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துவோம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய கொள்கை விளக்க உரையிலேயே ஜனா திபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- வடக்கில் காணி தொடர்பாக தீர்க்கப்படாத பிரச்சினைகள் உள்ளதை நாம் அறி வோம். பலாலி இராணுவ முகாமுக்காக கையேற்கப்பட்டிருந்த 100 ஏக்கர் காணி கள் அண்மையில் விடுவிக்கப்பட்டன. இன்னும் பல ஏக்கர் காணிகள் தொடர் பாக தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. அது தொடர்பாக இராணுவம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரை யாடப்படுகிறது. ஏனைய பாதுகாப்பு முகாம்களை அண்மித்த காணிகள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் காணிகள் தொடர்பில் பாரதூரமான பிரச்சினை காணப்படுகிறது. இதற்கு முன்னர் வர்த் தமானி அறிவித்தல் மூலம் காடுகள் தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் விமானத் தில் இருந்து எடுக்கப்பட்ட படம் அடிப் படையாகக் கொள்ளப்பட்டது.

போர் மற்றும் ஏனைய காரணங்களால் காடுகளாக்கப்பட்ட கிராமங்களின் பல காணிகள் வனப்பிரதேசங்களாக வர்த்த மானியில் பெயரிடப்பட்டன, தற்போது போர் முடிவடைந்துள்ளது. ஆனாலும் தமக்கு உரித்தான பல காணித் துண்டு கள் வனப்பிரதேசங்களாக வர்த்தமானி யில் வெளியிடப்பட்டுள்ளதால் மக்க ளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

மொனராகலை தொடக்கம் யாழ்ப்பா ணம்வரை மக்கள் இந்தப் பிரச்சி னையை எதிர்கொண்டுள்ளார்கள்.

1985 ஆம் ஆண்டின் வரைபடத்தின் பிரகாரம் காடுகள் மற்றும் காணிகளை மீண்டும் வர்த்தமானியில் வெளியிட்டு இந்த அநீதியை சரிசெய்வதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடுந்தீவு கல்விக் கோட்டப் பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-9)

# மதமாற்றம் செய்யாதீர்!



## தவத்திரு விபுலானந்த சுவாமி கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 9

நாங்கள் வேறு மதத்துக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் எங்கள் மதத்தவரை மதம்மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம். இவ்வாறு யாழ். ஊடக அமையத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தவத்திரு விபுலானந்த சுவாமி அடியார் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வவுனியா மாவட்டத்தில் சைவசமயத்தவர்கள் மதமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. திருக்கேதீஸ்வர ஆலயத்தின் முகப்பு கடந்த காலங்களில் உடைக்கப்பட்டிருந்தது. அதனை புனரமைப்பதற்கு எங்கள் அமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. நாங்கள்வேறு மதத்துக்கு எதிரானவர்கள் அல்லர். ஆயினும் எங்கள் மதத்தவரை மாற்றும் நடவடிக்கையில் ஈடுபடாதீர்கள்- என்றார். (ச-20)


### வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி இருந்து வீட்டு வேலை செய்யப் பணிப்பெண் தேவை.

தொடர்பு: 075 980 8444


### பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும்

யாழ்ப்பாணம், பெப்.9

வடமாகாண இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர்கள் சங்கத்தின் நிர்வாக சபைத் தெரிவுக்கான பொதுக் கூட்டமும் வருடாந்த ஒன்றுகூடலும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருத்துவமனை வீதியிலுள்ள கிறீன் கிறாஸ் விடுதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்துக்கு அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பட்டம் பெற்றவருக்கே ஆசிரியர் நியமனம்!

## *2028 இல் நடைமுறை*

கொழும்பு, பெப். 9

தற்போது நடைமுறையில் உள்ள கல்வியியற் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கென தேசிய கல்வியியல் பல்கலைக்கழகம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில:

தேசிய கல்வியியல் பல்கலைக்கழகம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

2028ஆம் ஆண்டின் பின்னர் இங்கு பட்டம் பெற்றவர்களுக்கு மாத்திரமே ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுமே தவிர வேறு எவரும் ஆசிரிய நியமனத்துக்குள் உள்ளீர்க்கப்பட மாட்டார்கள்- என்றார். (ச-6)


### விற்பனைப் பிரதிநிதி தேவை

கோண்டாவிலில் இயங்கும் உள்ளூர் உற்பத்தி நிலையத்துக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 301 6834

### வேலையாள்கள் தேவை

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் T.O (இரண்டு வருட அனுபம்)
2. கணிய அளவையியலாளர் Q.S
3. பயிலுநர் (Trainee)

077 958 3944

E.Mail: Sshaganaconstruction@hotmail.com

### மணமகன் தேவை

1994 ஆம் ஆண்டு பிறந்த லண்டனில் குடியுரிமை பெற்ற யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட மகராசி அவிட்ட நட்சத்திரமுடைய மணமகளிற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணமகன் தேவை.

074 353 6881

### வேலையாட்கள் தேவை

யாழில் பிரபல உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர்(ஆண்) உடனடியாகத் தேவைப்படுகின்றார். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (ரொட்டி வேலை தெரிந்து இருந்தால் மிகவும் விரும்பத்தக்கது.)

தொடர்பு: 077 3611 301


# சிறுவர்கள் மீதான தாக்குதல் பொலிஸாருக்கு இடமாற்றம்!



கொழும்பு, பெப். 9

முல்லைத்தீவு - தேவிபுரம் பகுதியில் கடந்த 2 ஆம் திகதி, நண்பனின் பிறந்தநாளுக்குச் சென்று திரும்பிய சிறுவர்கள் மீது பொலிஸார் காட்டுமிராண்டித் தனமான தாக்குதலை நடத்திய நிலையில், குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டியில் வந்த மூன்று பொலிஸார் இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்றும் அவலக்குரல் எழுப்பியதையடுத்து பொலிஸார் அங்கிருந்து தப்பிச் சென்றனர் என்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். மாணவர்களின் பெற்றோரால் முல்லைத்தீவு உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் கடந்த 3 ஆம் திகதி முறைப்பாடு வழங்கப்பட்டது. இதையடுத்து குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸாருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கு எதிராக விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-19)


### மணப்பெண் தேவை

01. கொடிகாமம் - Jaffna town இந்து கௌரகுடும்பம் (V), 1980, ஆயிலியம், Lawyer, Australiya citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
02. யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம் (V), 1988, ரோகினி, Senior Managment Accountant, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
03. வடமராட்சி, இந்து, கௌரவகுலம் (V), 1974, சித்திரை, Machine Maintanancy, Australiya Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
04. அளவெட்டி , இந்து , கௌரவகுலம் (V), 1983, பூரட்டாதி, MSc.,Quantity Sarueyer, Australiya Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
05. காரைநகர், இந்து, கௌரவகுலம் (V), 1992, மகம், Software Engineer, Australiya Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06. காரைநகர், இந்து, கௌரவகுலம், (V), 1991, பூரட்டாதி, BSc in civil Engineering Australiya Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07. சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம் (V), 1992, சதயம், MBBS Doctor, Vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. மச்சம் உண்பவர்களும் பரவாயில்லை.
08. ஆனைப்பந்தி, இந்து கௌரவகுலம் (V), 1994, உத்திரட்டாதி, Lawyer, Australiya Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
09. இணுவில், இந்து, கௌரவகுலம் (V), 1994, திருவோணம், ACCA, BIT, MSc, Australiya Citizen, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10. புலோலி, இந்து, கௌரவகுலம் (V), 1985, உத்திராடம், MBA, MSc, BSc Engineering, LLM, UK, Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
11. நயினாதீவு, இந்து கௌரவகுலம் (V), 1995, விசாகம், MSc in Engineering, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
12. தன்னாலை, இந்து, கௌரவகுலம் (V), 1984, மூலம், Master of Business Administration, Accountant, UK, citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728


# மரண அறிவித்தல்

தோற்றம் 14 - 10 - 1947



மறைவு 07 - 02 - 2023

## சபாரட்ணம் அருளானந்தபிள்ளை (அருள்)

புதுவீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை (ஸ்ரீ/ ஞானபண்டித வித்தியாசாலை அருகாமை) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் அருளானந்தபிள்ளை (அருள்) கடந்த (07.02.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் ராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை சுகிர்தரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சிவானந்தபிள்ளை, திருமலர், தெய்வேந்திரம் மற்றும் யோகமலர், திருலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தினேஸ், கீர்த்திகா, சபேதினி, திவியந்தன், கர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் ஜெயரஞ்சிதமலர், ஜெயரூபன், ஜெயமாலினி, ஜெயசீலன், ஜெயகாந்தன் ஆகியோரின் மைத்துனரும், பிரகாஷ், நிஹாரா, கஜீபன் ஆகியோரின் மாமனாரும், கோவர்த்தன், சௌமியா, கரினேஸ், சைனப் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுவீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
(ஸ்ரீ/ ஞானபண்டித வித்தியாசாலை அருகாமை) (CS/49011)4,6

தகவல்:
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.